සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved Carnatic Music

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025

தரம் - 6

கர்நாடக சங்கீதம்

சுட்டெண் :

நேரம் : 2 மணித்தியாலம்

பகுதி – I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. ஸ்வர வரிசைகள் பாடப்படும் இராகம் யாது?
   1. மாயாமாளவகௌளை
   2. சங்கராபரணம்
   3. கல்யாணி
   4. மோகனம்

2. அன்பு நிறைந்த பாட்டி எனும் பாடலை இயற்றியவர் யார்?
   1. வாமதேவன்
   2. திருமதி. கோகிலா மகேந்திரன்
   3. சுப்பிரமணிய பாரதியார்
   4. ஸ்ரீ புரந்தரதாஸர்

3. தோடுடைய செவியன் எனும் தேவாரம் அமைந்த பண்.
   1. கம்பீரநாட்டை
   2. பஞ்சமம்
   3. நட்டபாடை
   4. செந்துருத்தி

4. வளர்ந்தோர் பருவப் பாடல்கள் யாவை?
   1. தாலாட்டு, ஒப்பாரி
   2. மருத்துவிச்சிபாடல், தாலாட்டு
   3. அருவிவெட்டுப்பாடல், மீனவப்பாடல்
   4. ஊஞ்சல்பாடல், விளையாட்டுப்பாடல்

5. லகுவின் அங்கக் குறியீடு யாது?
   1. l
   2. o
   3. U
   4. //

02. சரியாயின் (√) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுக.

6. திஸ்ர நடையின் ஜதிச் சொல் தகிட என்பதாகும். (……..)

7. தமிழ் மொழி வாழ்த்துப் பாடலை இயற்றியவர் ஆனந்த சமரகோன் ஆவார். (……..)

8. சங்கீதத்திற்கு தாளம் தந்தையை போன்றது. (……..)

9. நத்தார் பண்டிகையை கொண்டாடப்படுபவர்கள் கிறிஸ்தவர்கள் ஆவார். (……..)

10. சப்தஸ்வரங்கள் 8 ஆகும். (……..)

Past Papers Wiki

03. தொடர்புபடுத்துக.

1. சித்திரைப் புத்தாண்டு	தகதிமி
2. ஸ்வரம்	லகு, த்ருதம், அனுத்ருதம்
3. லக்கை லாலக்கை	ஏழு
4. திரியாங்கம்	மாவு இடித்தல் பாடல்
5. சதுஸ்ர நடை	தமிழர்கள், சிங்களவர்கள்.

04. இடைவெளி நிரப்புக.

(நாட்டார், சிரவணக்கலை, ஆஹதநாதம், தைப்பொங்ல், த்ருதம்)

1. சங்கீதத்தை …….. என்றும் அழைப்பர்.
2. மண்ணைநம்பி …… பாடல் வகையாகும்.
3. சூரியனுக்கு நன்றி செலுத்தும் முகமாக …… விழா கொண்டாடப்படுகிறது.
4. மனித முயற்சினால் உண்டாவது …….. ஆகும்.
5. தாளத்தின் அங்கங்கள் லகு, …….. , அனுத்ருதம்.

(2x20=40 புள்ளிகள்)

අ.පො.ස සාමාන්‍යපෙළ විභාග ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් පත්‍ර/සටහන්වලට Past Papers Wiki අපේ පිවිසෙන්න

பகுதி – II

- **முதலாம் வினாவிற்கும் ஏனைய நான்கு வினாக்களுக்கும் மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. 1. கிறிஸ்தவமதத்தவர்களால் கொண்டபடப்படும் பண்டிகை யாது?
    2. சங்கராபரண இராகத்தின் மேள எண்?
    3. தேசிய கீதம் பாடப்படும் இராகம் யாது?
    4. சூழலில் கிடைக்கும் பொருட்களை வைத்து செய்யப்படும் இசைக்கருவிகள் எவ்வாறு அழைக்கப்படும்?
    5. சுருதிக்கு வழங்கப்படும் வேறு பெயர் யாது?
    6. தமிழ் மொழி வாழ்த்து பாடப்படும் இராகம் யாது?

(2x6=12 புள்ளிகள்)

02. 1. திஸ்ர நடை என்றால் என்ன?
    2. அதன் ஜதி யாது?
    3. சதுஸ்ர நடை என்றால் என்ன?
    4. அதன் ஜதி யாது?

(3x4=12 புள்ளிகள்)

03. 1. கிறிஸ்தவர்களால் கொண்டாடப்படும் பண்டிகை யாது?
    2. அப் பண்டிகை கொண்டாடப்படும் மாதம், திகதி யாது?
    3. நத்தார் பண்டிகையை பற்றி 6 வசனம் தருக?

(1+2+9=12 புள்ளிகள்)

04. 1. தாளம் என்றால் என்ன?
    2. தாளங்களின் அங்கங்களைத் தருக?
    3. அவற்றின் செய்கை முறைகளைத் தருக?

(3x4=12 புள்ளிகள்)

05. 1. தமிழ் மொழி வாழ்த்துப் பாடலை இயற்றியவர் யார்?
    2. அதன் இராகம், தாளம் தருக?
    3. பாடப்படும் சந்தர்ப்பங்கள் 2 தருக?

(3x4=12 புள்ளிகள்)

06. 1. லக்கை லாலக்கை எனும் பாடல் அமைந்த இராகம் யாது?
    2. அதனை இயற்றியவர் யார்?
    3. அப்பாடல் அமைந்த இராகத்தின் ஸ்வரத்தானங்களைத் தருக?
    4. அன்பு நிறைந்த பாட்டி எனும் பாடலை இயற்றியவர் தாளம் தருக?

(3x4=12 புள்ளிகள்)

07. நீர் கற்ற ஸ்வர வரிசை ஒன்றினை இராகம், தாளம், ஆரோகணம், அவரோகணம், இயற்றியவர் அங்கங்கள் என்பவற்றை தந்து எழுதுக.

(12 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank